2015 மார்ச் 27]

என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

66—

புதிய கட்டடம்

***28812—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டம், கழுவன்குளத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமமே வடிவாக, தமிழகம் செய்த தவப்பயனாக மாமழையாய் வந்திறங்கி, தேன்தமிழ் தேசத்தைக் குளிர்விக்கும் புரட்சித் தாயே, பூமியின் மாதாவே, தாயே, தாங்கள் இருக்கும் திசை நோக்கி தங்களின் திருப்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டத்திலுள்ள கழுவன்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு, 1985 ஆம் ஆண்டு 1,200 சதுர அடி நிலப்பரப்பில் கட்டடம் கட்டப்பட்டு செயல்பட்டு வந்தது. அக்கட்டடம் பழுதடைந்ததால், தற்போது கழுவன்குளம் கிராமத்திலுள்ள கலையரங்கக் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்ட தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து

வட்டியில்லாக் கடனாக ரூ.9,76,635/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3-8-2014 அன்று கட்டுமானப் பணி தொடங்கப்பட்டு, கட்டடப் பணி நிறைவுறும் நிலையிலுள்ளது. எனவே, விரைவில் உரிய கட்டடத்தில் சங்கம் செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் இதயத் துடிப்பே! நாடு போற்றும் நட்சத்திரமே! தாழும் தமிழகத்தைத் தலைநிமிரச் செய்தவரே! முரட்டுத்தன முதியவரை மூலையில் அமரச் செய்தவரே! வரலாறு காணாத வெற்றியைக் கண்ட வெற்றித் தலைவியே! எங்கள் அன்னையே! மக்கள் முதல்வரே! டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட கழுவன்குளம் கிராமத்திலிருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் காஞ்சிரங்குளம், முக்குடி, பொட்டப்பாளையம், புலியூர், சொட்டதட்டி போன்ற ஐந்து ஊராட்சிப் பகுதிகளில் கிட்டத்தட்ட 19 கிராமங்களை உள்ளடக்கிய சங்கம். இந்தச் சங்கத்திற்கு கட்டடம் கட்டவேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தவுடன், கட்டடங்களைக் கட்டிக் கொடுத்த மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறிக்கொண்டு, அந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு உரக் கிடங்கையும் கட்டித் தர வேண்டுமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தச் சங்கத்திற்கு 100 மெட்ரிக் டன் அளவு கொண்ட ஒரு ஊராட்சிக் கிடங்கு கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் அதை முழுமையாகப்*

2015 மார்ச் 27]

பயன்படுத்திக்கொள்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

67—

தங்கும் விடுதி

***41108—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூரிலுள்ள அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழ வைக்கும் தெய்வம், எங்கள் கண்கண்ட தெய்வம், மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூரில் அமைந்துள்ள அருள்மிகு மகாலிங்கசுவாமி திருக்கோயிலின் கிழக்குக் கோபுர வாயிலின் தென்புறம் திருக்கோயிலுக்குச் சொந்தமான பக்தர்கள் தங்கும் விடுதி ஏற்கெனவே உள்ளது. இவ்விடுதியே பக்தர்களுக்குப் போதுமானதாகவும் உள்ளது. எனவே, புதிதாக தங்கும் விடுதி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.